


# ஹர ஹர சங்கரா



**FREE COPY**

**September - 2026**

**Vol. 5 - ISSUE 11**


# KODAMBAKKAM TIMES

# பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் ஏன்?

1. முதல் மூன்று ஆண்டுகள் தெய்வம் கருவரையில் இருக்கும்.




2. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தெய்வம் பலிபீடத்தில் இருக்கும்.



3. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தெய்வம் கொடி மரத்தில் இருக்கும்.



4. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தெய்வம் கோபுர கலசத்திற்கு செல்லும்.



5. கோபுர கலசத்தில் இருக்கும் தெய்வத்தை மீண்டும் கருவரைக்கு அழைத்து வரவே, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு செய்யப்படுகிறது.




# குன்னந்தார் வலம்புரி விநாயகர்

குன்னந்தார் மலை மற்றும் குடைவரைக் கோவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள குன்னந்தார் மலை, தமிழகத்தின் தொன்மையான குடைவரைக் கோவில் தலங்களில் ஒன்றாகும்.

பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்ட இந்தக் கோவில் பாண்டியர் கால கட்டிடக்கலையின் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

குன்னந்தார் மலையில் சிவபெருமான், விநாயகர் மற்றும் பிற தெய்வங்களின் சிற்பங்கள் அழகாக செதுக்கப்பட்டுள்ளன.




இந்தத் தலத்தின் மிகப்பெரிய சிறப்பு வலம்புரி விநாயகர் ஆவார். தமிழ்நாட்டில் அரிதாகக் காணப்படும் வலம்புரி விநாயகர் வடிவங்களில் இது மிகவும் பழமையானதாகக் கருதப்படுகிறது.

வலம்புரி விநாயகரின் மகிமை :

பொதுவாக விநாயகரின் தும்பிக்கை இடதுபுறமாக வளைந்திருக்கும். ஆனால் இத்தலத்தில் விநாயகரின் தும்பிக்கை வலதுபுறமாக வளைந்திருப்பதால் "வலம்புரி விநாயகர்" என அழைக்கப்படுகிறார்.

வலம்புரி வடிவம் :

சூரிய நாடியின் சக்தியைக் குறிக்கிறது. வேகமாக அருள் வழங்கும் வடிவமாக கருதப்படுகிறது. ஞானம், செல்வம் மற்றும் வெற்றியை அருள்புரிவதாக நம்பப்படுகிறது. தொழில் மற்றும் வியாபார வளர்ச்சிக்காக பக்தர்கள் அதிகமாக வழிபடுகின்றனர்.

திருமேனி அமைப்பு :

குன்னந்தார் விநாயகர் நான்கு கரங்களுடன் காட்சி தருகிறார். வலது தும்பிக்கை கொண்டுள்ளார். அமைதியான முகபாவத்துடன் அருள்பாலிக்கிறார். பாறையிலேயே செதுக்கப்பட்ட சிற்பமாக காணப்படுகிறார். இந்தச் சிற்பம் பண்டைய சிற்பிகளின் கலைத்திறனை வெளிப்படுத்துகிறது.

தல வரலாறு :

பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இந்தக் குடைவரைக் கோவில் உருவாக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பல நூற்றாண்டுகளாக பக்தர்களின் வழிபாட்டில் இருந்து வரும் இத்தலம் புதுக்கோட்டை பகுதியின் முக்கியமான தொல்லியல் நினைவுச் சின்னமாகவும் விளங்குகிறது.

மலையில் காணப்படும் கல்வெட்டுகள் மற்றும் சிற்பங்கள் அக்கால மக்களின் சமய வாழ்க்கை, கலை மற்றும் பண்பாட்டைப் பற்றிய அரிய தகவல்களை நாம் தெரிந்துகொள்ள உதவுகின்றன.

பரிகார வழிபாடுகள் :

இங்கு பக்தர்கள் : தேங்காய் உடைத்து வழிபடுதல், அருகம்புல் மாலை சாற்றுதல், எருக்கம்பூ மாலை சமர்ப்பித்தல், சங்கடஹர சதுர்த்தி விரதம் மேற்கொள்ளுதல், விநாயகர் அகவல் பாராயணம் செய்தல் போன்ற வழிபாடுகளைச் செய்கின்றனர்.

தரிசனத்திற்கு ஏற்ற நாட்கள் :

விநாயகர் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, மாத சதுர்த்தி, தமிழ் புத்தாண்டு, ஆவணி மாத சிறப்பு பூஜைகள் ஆகிய நாட்களில் அதிகமான பக்தர்கள் வருகை தருகின்றனர்.

இருப்பிடம் :

குன்னந்தார் மலை புதுக்கோட்டை நகரிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பேருந்து மற்றும் தனியார் வாகனங்கள் மூலம் எளிதில் சென்றடையலாம்.

தலத்தின் தனிச்சிறப்பு :

குன்னந்தார் வலம்புரி விநாயகர் தலம் பாறையிலேயே செதுக்கப்பட்ட அரிய வலம்புரி விநாயகர் சிற்பத்தால் புகழ்பெற்றது. வரலாறு, கலை, ஆன்மீகம் ஆகிய மூன்றும் ஒன்றாக சங்கமிக்கும் இந்தத் தலம் புதுக்கோட்டை மாவட்டத்தின் மறைந்திருக்கும் ஆன்மிகப் பொக்கிஷங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பக்தியுடன் தரிசிக்கும் அனைவருக்கும் விநாயகப் பெருமான் தடைகளை நீக்கி வெற்றிப் பாதையை அருள்வார் என்பது பக்தர்களின் உறுதியான நம்பிக்கையாகும்.


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

# காயத்ரி ஸ்லோகத்தின் முக்கியத்துவம்

ஏகாதசி போல் விரதமில்லை, காயத்ரியை போல் மந்திரமில்லை. ஏகாதசி என்றால் விஷ்ணுவின் உடலில் இருந்து தோன்றிய ஒருபெண் அவள் அரக்கனை சம்ஹாரம் செய்ய அவதரித்தாள். அந்த பெண் அரக்கனை வதம் செய்த அந்த ஏகாதசி தினத்தில் விஷ்ணுவை விரதம் இருந்து வழிபட்டால் முக்தி கிட்டும் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஆனால் இந்த காயத்ரி மந்திரம் ஏன் ஏகாதசிக்கு சமமாக முக்கியத்துவம் பெறுகிறது?

விஷ்வாமித்திரர் என்னும் ரிஷியை பற்றி கேள்விப்பட்டு உள்ளீரா? சத்திரியரான அவர் தான் இந்த காயத்திரி மந்திரத்தின் படைப்பாளி உலக ஷேமத்திற்காக தன் தவ வலிமையால் அந்த சத்திரியர் உருவாக்கிய மந்திரத்தை தான் இன்று வேதியர்கள் பிராமணர்கள் உலக ஷேமத்திற்காக தினமும் ஜெபிக்கின்றனர்.

விஷ்வம் என்றால் உலகம், மித்ரன் என்றால் நண்பன். விஷ்வாமித்ரன் என்றால் உலகத்தின் நண்பன் என்று அர்த்தம். அவர் இயற்பெயர் கௌசிகன் உலகத்தின் ஷேமத்திற்காக எப்போதும் தவம் புரிவதும் நல்லதை நினைப்பதும் அவர் தொழிலாக கொண்டு இருந்ததால் விஸ்வாமித்திரர் என அப்பெயரை பெற்றார்.

காயத்ரி என்பதற்கு காயம் ஸ்ரீ திரி என்று அர்த்தம் அதாவது விஸ்வாமித்திரர் உடலை திரியாக்கி இம் மந்திரத்தை உருவாக்கியதால் காயத்திரி என இப்பெயர் இந்த மந்திரத்துக்கு வந்தது.

ஒரு முறை சத்ரியனான கௌசிக மன்னனுடைய நாட்டில் கடும்பஞ்சம் வந்தது இதை போக்க கௌசிக மன்னன் மகரிஷி வசிஷ்டரிடம் இருக்கும் காமதேனு பசுவின் பெண்வயிற்று பிள்ளையான நந்தினி என்ற பசுவை தன் நாட்டின் பஞ்சம் போக்கவேண்டி இரவல் கேட்கிறான். வசிஷ்டர் பசுவை தர மறுக்கிறார்.

சினம் கொண்ட கௌசிகன் அவர் மேல் போர்தொடுத்து தோல்வி அடைகிறான்.

வசிஷ்ட்டர் கௌசிகனை பார்த்து பிரம்மரிஷிகளுக்கு மட்டுமே காமதேனு, நந்தினி என்ற பசுக்கள் கட்டுப்படும் தேவரீ் பிரம்ம ரிஷி யானால் இந்த பசுவை தருகிறேன் என்றார்.

மேலும் தவம் இயற்றினாலும் ஒரு சத்திரியனால் எளிதில் பிரம்மரிஷி பட்டம் வாங்கமுடியாது என்றும் வசிஷ்டர் உரைக்க கௌசிகன் அந்த பிரம்ம ரிஷி பட்டத்தை வாங்கி காட்டுவதாக வசிஷ்டரிடம் சவால் விடுகிறார். சவால் விட்ட கௌசிகன் ஒரு கள்ளி செடியின் முனையின் மேல் நின்று கடும் தவம் புரிகிறார். இதைக் கண்ட அன்னை சக்தியானவள் கௌசிகன் முன் தோன்றி தன் கோவிலில் உள்ள விளக்கில் பஞ்சமுகமாக திரி போட்டு தீபம் ஏற்றினால் உன் தவம் சித்தியாகும் என அறிவித்து மாயமானார்.

சக்தியின் வாக்கை ஏற்று நான்கு வேதங்களின் பிறந்த நாளான ஸ்ரவணமாத பௌர்ணமி அன்று அவளது ஆலயம் வந்து பஞ்சமுக திரி வைத்து ஏற்ற முனைகிறார். அந்த திரிகள் எவ்வளவு முயன்றும் துளிக்கூட எரியவில்லை.

உடனே அந்த விளக்கில் தான் ஏறி தனது உடலின் தலை, இரண்டு கை, இரண்டு கால் இவைகளை ஐந்து முகத்திலும் வைத்து அந்த விளக்கை ஒரு மந்திர உச்சாடணம் செய்து எரிய வைக்கிறான்.

அவர் தன் உடலையே திரியாக்கி ஒரு நாள் முழுவதும் அன்ன ஆகாரமின்றி தன் நாட்டு மக்களுக்காக போராடுவதை கண்டு ஜோதியான அந்த சக்தி விஸ்வாமித்திரர் என்று அழைத்து பிரம்மரிஷி என்ற பட்டத்தையும் கொடுத்தாள்.

தன் உடலை திரியாக்கி அந்த ஜோதியை மையமாக வைத்து தன் தவத்தால் கௌசிக மன்னன் தான் அறிந்த நான்கு வேதத்தின் சாரமாக ஒரு மந்திரம் இயற்றி உச்சாடணம் செய்ததால் அதுவும் மந்திரத்திற்காக தன் உடம்பையே (காயத்தை) திரியாக்கி உச்சாடணம் செய்து வரம் பெற்றதால் அந்த மந்திரம் காயத்திரி மந்திரம் என இனி அழைக்கப்படும் என்றாள்.



கௌசிகன் கூறிய இந்த மந்திரம் நான்கு வேதங்களின் சாரம் என்பதால் இந்த மந்திரத்தை இனி வேதியர்கள் ஜோதி சொரூபமான என்னை உத்தேசித்து உச்சாடணம் செய்து உலகம் உய்ய பிரார்த்தனை செய்யட்டும் என அருளியதால் அன்று முதல் காயத்ரியை வேதியர்களான நாம் இன்றுவரை சந்தியாவந்தனத்துக்கு பின் நித்யானுஷ்டானமாக ஜோதி சொரூபமானவளை வேண்டி உச்சாடணம் செய்கிறோம்.


காயத்ரி மந்திரத்துக்கு கட்டுப்பட்ட அவளை அந்த மந்திரத்தை கொண்டே காயத்ரி தேவி என அழைக்கிறோம். சிரவண மாத பௌர்ணமிக்கு மறுநாள் அவர் அந்த மந்திரத்தால் பிரம்மரிஷி என்ற பட்டம் பெற்றதால் நாமும் நன்மைகளை வேண்டி அன்று காயத்ரிதேவியை உத்தேசித்து ஜபம் செய்ய ஆரம்பிக்கிறோம்.

அன்று எவ்வளவுக்கு எவ்வளவு மந்திர உச்சாடணம் செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நம் பூர்வஜன்ம பாவங்கள் தொலைந்து நமக்கும் சித்தி உண்டாகும்.

இப்போது புரிந்து கொண்டீரா காயத்ரி மந்திரம் எப்படி ஏன் வந்தது, அதன் மகிமை, அதை ஏன் உபாகர்மாவுக்கு மறுநாள் கொண்டாடுகிறோம் என்று.

# தீக்ஷை :
# தெய்வத்தின் குரல்

குரு - சிஷ்யாளுக்கு இடையில் ஏற்படும் தொடர்பை நான் "உபதேசம்" என்று சொன்னாலும் சாஸ்த்திரத்தில் இதற்குச் சொல்லியிருக்கிற வார்த்தை (technical term) "தீக்ஷை" என்பதேயாகும். "தீக்கை" என்று தமிழில் சொல்லியிருக்கும். "இனிஷியேஷன்" என்கிறார்கள். குருவிடமிருந்து எது புறப்பட்டுப் போய், சிஷ்யனுக்குள்ளே புகுந்து, அவனை ஒரு மார்க்கத்தில் தீவிரமாக தூண்டிச் செலுத்துகிறதோ அதற்கு "தீக்ஷை" என்று பெயர். இப்படி ஒரு மார்க்கத்தில் சிஷ்யன் பிரவேசிப்பதற்கு ஆரம்ப சக்தியாக இருப்பதால் தான் "இனிஷியேட்" பண்ணுவது என்கிறார்கள். ஆனால் ஆரம்பித்து வைத்து விடுவதோடு (இனிஷியேட் பண்ணுவதோடு) அந்த சக்தி தீர்ந்து போய் விடுவதில்லை. ஆரம்பித்து வைத்த பிறகு வழி நெடுகவும் கூடவந்து துணை செய்து மேலே மேலே போகப் பண்ணி லக்ஷ்யத்தை அடைந்து ஸித்தி பெறவும் வைக்கிறது.



மந்த்ர ரூபமாகவோ, ஒரு கடாக்ஷமாகவோ, ஸ்பர்சமாகவோ, அநுக்ரஹ ஸ்மரணத்தினாலோ க்ஷண காலம் இப்படி ஒரு குரு ஒருத்தனோடு "லிங்க்" பண்ணிக் கொண்டு விட்டாலும், அதுவே சாஸ்வதமாக அவருடைய அநுக்ரஹத்தை இவனுக்குக் கொடுத்துக் கொண்டு "பெர்மனென்ட் கனெக்ஷனாக இருக்கும். ஒரு தடவை ஸ்விட்சை தட்டிவிட்டு விட்டால் அது பாட்டுக்கு எரிந்து கொண்டேயிருக்கிறார்போல "கைவல்ய நவநீதம்" முதலான புஸ்தகங்களில் இந்த ஸ்பர்ச, கடாக்ஷ, ஸ்மரண தீக்ஷைகளை (முறையே) ஹஸ்த, நயன, மானஸ தீக்ஷைகள் என்று சொல்லியிருக்கிறது.

ஆசார்யர் என்பவர் ஸ்தூலமாக சிஷ்யனிடம் long-term contact (நீண்டகாலத் தொடர்பு) வைத்துக் கொண்டு அவனைப் படிப்பிலும் நடத்தையிலும் train பண்ண வேண்டியவர் குருவுக்கோ சிஷ்யனிடம் ஸ்தூலத் தொடர்பு ரொம்பவும் கொஞ்ச காலம் இருந்தால் போதும் அல்லது அதுவுங்கூட இல்லாமலுமிருக்கலாம். ஆனால் தீக்ஷையின் மூலமாக அவருக்கும் சிஷ்யனுக்கும் ஏற்பட்ட ஸூக்ஷ்மமான contact - X (தொடர்போ) long term க்கும் மேலே, அது life-long ஆனது (வாழ்க்கை முழுவதற்குமானது) life circle எல்லாம் போய், ஜன்மங்கள் எல்லாம் தீர்ந்து சிஷ்யன் ஸித்தி பெறுகிற வரையில் நீடிக்கிற contact இது.

இப்படி தீக்ஷை தருகிறதுதான் குருவுக்கு முக்யமான லக்ஷணமாய் நினைக்கப் படுகிறது. தீக்ஷா குரு, குருதீக்ஷை என்றே சொல்கிறது வழக்கம். தீக்ஷை கொடுப்பவரையே குரு என்பது வழக்காயிருக்கிறது. பழையகால இதிஹாஸம்,

புராணம், காவியம் இவைகளைப் பார்த்தால் தகப்பனாரையே குரு என்று சொல்லியிருக்கும். தகப்பனாராக இருக்கப் பட்டவனுக்கு குருவுக்கு இருக்க வேண்டிய உள்பெருமை, கனம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் புத்ரனைப் பொறுத்தமட்டில் பிதா தெய்வத்துக்கு ஸமானமல்லவா? "முன்னறி தெய்வம்" அல்லவா? அதனால் இப்படி அவரை குரு என்று உயர்த்திச் சொல்லியிருக்கலாம். இதே மாதிரி பாடம் சொல்லிக் கொடுக்கிற வாத்தியாரும், எழுத்தறிவித்தவன் இறைவன் என்கிறாற்போல தெய்வமாக நினைக்கப்பட வேண்டியவர்.

"பித்ரு தேவோ பவ" அடுத்தே "ஆசார்ய தேவோ பவ" என்றும் வேதம் ஆக்ஞை செய்திருக்கிறது. அதனால் இவரையும் குரு என்று பெருமைப் படுத்துவதாக ஏற்பட்டிருக்கலாம். பிதாவை குரு என்பதற்கு இன்னொரு காரணமும் தோன்றுகிறது. ஒரு ஜீவனுக்கு முதல் உபதேசம் எது? காயத்ரீதான். அந்த மந்த்ரத்தை உபதேசம் (ப்ரஹ்மோபதேசம்) செய்வது பிதா தானே? அதாவது காயத்ரீ மந்த்ர தீக்ஷை அப்பாதான் பண்ணுகிறார். இப்படி தீக்ஷை தருவதாலேயே அவரை "குரு" என்கிற வழக்கம் உண்டாகியிருக்கலாம். காயத்ரீ உபதேசத்தில் அதிகாரமில்லாதவர்களுக்குக்கூட அக்ஷராப்யாஸம் என்பது இருக்கிறது. அப்போது அஷ்டாக்ஷரமோ, பஞ்சாக்ஷரமோ உபதேசித்து அப்பன்காரன்தான் பிள்ளையை "ஆனா" எழுத வைக்கிறான். இந்த மந்த்ரோபதேசத்தாலேயே குரு ஆகிவிடுகிறான்.

---

# IQ, EQ, SQ, AQ என்கிற உளவியல் அளவீடுகள் தொண்டரடிப்பொடியாழ்வார் பாசுரத்தில் ஒத்துப்போவதை பார்ப்போம்

இப்போது சொல்லப்படும் IQ, EQ, SQ, AQ என்கிற உளவியல் அளவீடுகள் தொண்டரடிப்பொடியாழ்வார் பாசுரத்தில் ஒத்துப்போவதாக தோன்றுகிறது. தேவதேவி என்கிற தேவதாசியிடம் சிக்கிகொண்டு பிறகு தெளிவுற்ற தொண்டரடிப்பொடியாழ்வார் பாடும் பாசுரம்.

இந்த விளக்கம் மிகவும் சிந்திக்கத் தூண்டுகிறது. ஆழ்வார் கூறிய பாசுரத்தை நவீன உளவியல் கோணத்தில் பார்க்கும் ஒரு அழகான முயற்சி இது. இருப்பினும், IQ (Intelligence Quotient) என்பதை "மனத்தூய்மை" அல்லது ஒழுக்கம் என நேரடியாக ஒப்பிடுவது உளவியல் வரையறையில் சரியானதல்ல. IQ என்பது முதன்மையாக அறிவாற்றல், தர்க்கம், கற்றல் திறன் போன்றவற்றை அளவிடுகிறது. மற்ற ஒப்பீடுகள் உருவகமாக எடுத்துக்கொள்ளப்படலாம்.


திருமாலை தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய ஆழமான சுயபரிசோதனை


SREE MANGALAGURU JOTHIDA NILAYAM
'VAAZHVIL VELICHAM'
SURESH MADHAVAN
93609 45818
(With Appointment Whatsup Only)

"மனத்திலோர் தூய்மை யில்லை
வாயிலோர் இன்சொல் இல்லை
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா..."

ஆழ்வார் தமது குறைகளை மறைக்காமல் இறைவன் முன் ஒப்புக்கொள்கிறார். இன்றைய உளவியல் கோணத்தில் இதை உருவகமாகப் பார்க்கும்போது

"மனத்திலோர் தூய்மை இல்லை" - மனத் தெளிவும் சுயவிழிப்புணர்வும் (Self-awareness) இல்லாத நிலை. காமம், குரோதம், லோபம், மோகம் போன்ற குணங்கள் மனதை ஆட்கொண்டால் நல்ல சிந்தனைக்கும் ஆன்மிக முன்னேற்றத்திற்கும் இடமிருக்காது.



"வாயிலோர் இன்சொல் இல்லை: - EQ (Emotional Quotient) குறைந்தால், உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் கடுமையான வார்த்தைகள் வெளிப்படும்.

"சினத்தினால் செற்றம் நோக்கித்: - SQ (Social Quotient) குறைந்தால், நல்ல உறவுகள் பாதிக்கப்படும்: பிறரின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமை, பகை, வெறுப்பு உருவாகும்.

"தீவிளி விளிவன் வாளா" - AQ (Adversity Quotient) குறைந்தால், இக்கட்டான சூழ்நிலைகளில் நிதானம் இழந்து தீய சொற்களாலும் தவறான செயல்களாலும் எதிர்வினையாற்றுவோம்.

இவ்வளவு குறைகளையும் உணர்ந்த ஆழ்வார் இறுதியில் கேட்பது : "எனக்கினிக் கதியென் சொல்லாய், என்னையாளுடைய கோவே"

அதாவது "என் குறைகளை நான் உணர்ந்துவிட்டேன். இந்நிலையிலிருந்து என்னை உயர்த்தும் வழி என்ன? என்னைக் கைவிடாமல் நீயே காப்பாற்ற வேண்டும்".

இதுவே இந்தப் பாசுரத்தின் உச்சம். உண்மையான மாற்றம் என்பது நம்முடைய குறைகளை உணர்வதிலிருந்து தொடங்குகிறது. அந்த மாற்றத்தை முழுமையாக்குவது இறையருளும், சரணாகதியும் ஆகும். இந்தப் பாசுரம் வெறும் புலம்பல் அல்ல, அது சுயவிழிப்புணர்வு, மனமாற்றம் மற்றும் இறையருளை நாடும் ஆன்மிகப் பயணத்தின் அறிவிப்பு ஆகும்.

# ஆரியபட்டாள் வாசலின் வரலாறு

ஆர்யபட்டாள் வாசல் என்பது ஸ்ரீரங்கம் கோயிலில் உள்ள ஒரு முக்கியமான வாயிலாகும். இந்த வாயிலுக்கு இத்தகைய பெயர் ஏற்பட்டதற்கு ஸ்ரீரங்கத்தில் ஒரு கதையும் உண்டு. அதாவது வங்க தேசத்து அரசனால்தான் நமக்கு இந்த ஸ்ரீரங்கம் ஆர்யபட்டாள் வாசல் கிடைத்தது. ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி கோயிலின் 3-ஆம் பிரகாரத்தில் அமைந்துள்ள முக்கிய நுழைவாயில் ஆர்யபட்டாள் வாசலாகும். இதுவே மூலவர் சந்நிதிக்குச் செல்லும் வழியில் இருக்கும் மிக முக்கியமான பாதுகாப்பான எல்லையாகக் கருதப்படுகிறது. இவ்வாயிலின் வரலாறு, மற்றும் ஆன்மிக முக்கியத்துவம் பற்றி அறிவோம். உற்சவரான நம்பெருமாள் தினமும் வீதி உலா முடிந்து இந்த வாசல் வழியாகவே கருவறைக்குள் எழுந்தருளுவார். இஸ்லாமிய படையெடுப்பின் போது கோயிலை விட்டு மறைந்துபோன உற்சவ மூர்த்தியை (நம்பெருமாள்) மீட்டபோது, முதலில் அடையாளம் காணப்படாமல் இந்த வாயிலிலேயே வைக்கப்பட்டார்.

படையெடுப்புகளின் போது மூலவரைக் காக்க, இந்த ஆர்யபட்டாள் வாயிலுக்கு அருகில்தான் பக்தர்கள் கற்சுவர் எழுப்பிப் பாதுகாத்தனர். இந்த வாசல் வழியாகச் சென்றுதான் ரங்கநாயகி தாயார் சந்நிதிக்குச் செல்ல வேண்டும்.

அன்றைய கௌடம் என்பது இன்றைய வங்கதேச நாடு ஆகும். அந்த நாட்டின் மன்னன் அயோத்தியில் இருந்த அரங்கனைப் பற்றியும், பிரணவாகார விமானம் பற்றியும் அறிந்தவன்.

மிகச் சிறந்த பக்திமான், தான் என்ற ஓர் கர்வம் அவனது பக்தியைக் காட்டிலும் ஒரு துளி அவனிடம் அதிகமாக இருந்தது.

வடக்கில் இருந்த விக்கிரகமும், விமானமும் தெற்கிலே போயிற்றே அங்கே அவைகளுக்கான பூஜைகள், பிரசாதங்கள் சரிவர கிடைக்கின்றனவா என அறிய அந்தப் பெருமாளையும் விமானத்தையும் நான் ஸேவிக்க வேண்டும், அவனுக்கான பொன்னையும் பொருளையும் நிறைய கொடுக்க வேண்டும் முடிந்தால் அவனை மீண்டும் வடக்கே வரவழைக்க வேண்டும். இந்த எண்ணத்துடன் அவன் வங்கதேசத்திலிருந்து கிளம்பி ரங்கதேசம் வந்தான்.

தான் மட்டும் வரவில்லை தனது பரிவாரங்களுடன் யானைகள், குதிரைகள், நிறைய, நிறைய வண்டிகள் அவை நிரம்பி வழியும்படி பொன்னும் பொருளும் கொண்டு வந்தான்.

இவனது வருகைக்குப் பின் அரங்கனின் தேசமே பிதுங்கி வழிந்தது. தெருக்களில் மக்களின் முகங்கள் சற்று சுருங்கிப் போயின.

மன்னனைச் சுற்றி திருவரங்க மக்கள் சூழ்ந்து கொண்டு தாங்கள் யாரோ?

இத்தனைப் பரிவாரங்களுடன் பொன்னும், மணியும் எதற்காக என வினவினர்.

என்ன மக்களே வேடிக்கையான கேள்வி. நான் ஒரு மன்னன் என்பதை நானே தான் சொல்லணுமா? என்னை வரவேற்க இந்தச் சோழ தேசத்தில் மன்னன் இல்லையா?

ஒருவேளை தெற்குக்கு வரவேற்க தெரியாதா? கௌட நாட்டு மன்னன் வந்திருப்பதாய் உங்கள் மன்னனிடம் சொல்லுங்கள் என்றான்.

அப்படியா, மன்னனே தங்களின் அரங்க விஜயம் அரசாங்க சம்பந்தப்பட்டதா?

இல்லை, இல்லை அரங்கனை ஸேவிக்கவே இங்கே நான் வந்தேன். வேறு இங்கே எனக்கென்ன வேலை?



அதனால் தான் தங்கள் வருகையை எங்கள் மன்னன் அறியவில்லை போலும். வந்தாரை வரவேற்பதும், அவரை வாழ வைப்பதுமே தெற்கினுடைய தர்மமாகும்.

ஒஹோ, அப்படியா தெற்கு வாழ வைத்துத்தான் வடக்கு பிழைக்கிறதோ. இதோ என்னுடன் இங்கே பயணித்து வந்துள்ளார்களே எனது பரிவாரங்கள் அவர்களின் அலங்காரம் உம்மிடம் இருக்கிறதா?

உண்மைதான் எம்மிடம் அலங்காரமும் இல்லை, அகங்காரமும் இல்லை. தாங்கள் வந்த விஷயம் அரங்கனை ஸேவிப்பதுதானே ஸேவித்து நகருங்கள். ஆனால் ஒன்று, என்ன ஆனால் ஒன்று எதற்கு இந்த இழுவை?

மன்னனே தாங்கள் மட்டுமே உள்ளே செல்லலாம் இந்த பொன்னோ, மணியோ, உமது வீண் அகங்காரமோ உள்ளே அனுமதி கிடையாது.

சோழ தேசத்து மக்களே விரும்பி வரும் செல்வத்தை உதறித் தள்ளுகிறீர்களே இது நல்லதல்ல. இவை எம்பெருமானைச் சேர வேண்டும்.

மன்னனே அதற்கு முதலில் அரங்கன் அனுமதிக்க வேண்டும் என்றனர் மக்கள்.

என்ன உளறுகிறீர்கள், அரங்கன் நேரில் வந்து அனுமதிப்பானா என்ன?

நேரில் வர வேண்டியதில்லை அவனது விருப்பத்தை அவனே தெரிவிப்பான். எப்படி, எப்படி, எப்படி எத்தனை அவமானம் எனக்கு.

கோபம் வேண்டாம் மன்னனே இதோ அவனுக்குப் பிடித்தமான துளசியும், தாமரையும் இங்கே மாலைகளாக இருக்கின்றது. ஒரு சிறு குழந்தையை அதில் ஒரு மாலை ஒன்றை எடுக்கச் சொல்வோம் என்றனர் மக்கள்.

இது.. இது.. இது என்ன குழந்தைத்தனமான விளையாட்டு. அரங்கன் உங்களுக்கு விளையாட்டுப் பொருளா என்ன? இத்தனைச் செல்வத்தை உதறித் தள்ளுவது

வேதனையே.

அதைத்தான் நாங்களும் சொல்கிறோம். இத்தனைச் செல்வங்களையும் உதறித் தள்ள நாங்கள் முட்டாள்கள் அல்ல. ஆனால் அரங்கன் அனுமதி கிடைக்காமல் எதுவும் உள்நுழைய முடியாது. அது மட்டுமல்ல மன்னனே பெருஞ்செல்வம் என ஏதோ சொல்கிறீரே உமக்குத்தான் அவைகள் பெருஞ் செல்வங்களாகும். அரங்கனைப் பொறுத்தவரை அவை அவன் படைப்புகளில் ஒன்று.

எங்களுக்கான பெருஞ் செல்வம் எது தெரியுமா? அந்த அரங்கன் மட்டுமே. இனி இவர்களிடம் பேச முடியாது. என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என குழந்தை மாலை எடுக்க சம்மதித்தான் வங்கதேசத்து மன்னன்.

குழந்தை எடுத்தது துளசி மாலை. அவன் கொண்டுவந்த அனைத்தும் அரங்கனால் புறக்கணிக்கப்பட்டன. சோழ தேசத்து மக்களே இன்னொரு முறை குழந்தையை மலரை எடுக்கச் சொல்லலாமே.

மன்னனே அதற்காக நீ இன்னும் ஒரு வருட காலம் இங்கே காத்திருக்க வேண்டும். அடிக்கடி அரங்கனை அழைக்க இங்கே அனுமதி இல்லை. காத்திருந்தான் மன்னன். அவனுக்குள் இருந்த அகங்காரமும் மெல்ல, மெல்ல அவனிடமிருந்து விலகியது. கொண்டு வந்ததை அவனால் திரும்பி எடுத்துச் செல்ல துளியும் மனமில்லை. அவன் சாதாரணமானவன் அல்லவே மன்னனாயிற்றே அவசர அலுவல்கள் அவனைத் திரும்ப அழைக்க அங்கிருந்து நகர முடிவெடுத்தான் அவன்.

அவனுடன் வந்த பட்டர்களைத் தன்னிடம் அழைத்தான் மன்னன். தான் கொண்டு வந்த பொருட்களுக்குக் காவலாய் இங்கேயே இருந்து அரங்கனின் அனுமதி பெற்று அவைகளை அவனிடம் சேர்த்து பின் அங்கே வாருங்கள் என்று ஆணையிட்டு மன்னன் செல்ல அந்த வாயிலின் படியிலே படியோடு படியாக காத்திருந்தனர் பட்டர்கள்.

சும்மாதானே இருக்கிறோம் அரங்கனின் கோயிலில் கைங்கர்யம் செய்தபடி கோயிலையும், கொண்டு வந்த பொருட்களையும் காவல் காத்திருந்தபடி நாட்களைக் கழித்தனர்.

அவர்களது பக்தி அரங்க நகர் மக்களை மட்டுமல்ல அரங்கனையும் மகிழ்ச்சிப்படுத்த தாமரையைத் தேர்ந்தெடுத்து அனுமதி தந்தான் அரங்கன்.

அரங்கனைக் கண்டவர் பிரிய மனம் விரும்பவில்லை. அங்கேயே தங்கி அரங்க சேவையில் தம் நாட்களைக் கழித்தனர் அவர்கள்.

தாம் மட்டுமல்ல தமது வம்சாவளியே அரங்கனின் சேவையில் தங்களை ஆட்படுத்திக் கொள்ளும் என உறுதியோடு இருந்தனர்.

வடக்கிலிருந்து வந்ததால் ஆர்யபட்டர்கள் என்றும், அவர்கள் படியாய் கிடந்த இடம் ஆர்யபட்டாள் வாயில் என்றும் இன்றும் அழைக்கப்படுகிறது. அது மட்டுமல்ல அந்த வாயிலை நம்பெருமாள் கடக்கும் சமயங்களில் வங்கதேச மன்னனுக்கு அருளப்பாடு சாதிப்பதும் பின்னர் வழக்கமாயிற்று.

எல்லாம் அரங்கனின் ஏற்பாடே

# ஆனைமுகனும் அருகம்புல்லும

விக்னங்களை தீர்க்கும் விநாயகப் பெருமானுடைய பூஜையில் அருகம்புல்லுக்கே பிரதானமான இடம் உண்டு. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதமான வழிபாட்டு முறைகள் உள்ளன. இவற்றில் சமர்ப்பிக்கப்படும் மலர்கள், பட்சணங்கள், நைவேத்ய முறைகளும் வேறுபடுகின்றன. இதே போல் ஆனைமுகப் பெருமானுடைய பூஜையில் அருகம்புல்லிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு காரணமான புராண கதையை நாம் அறிந்து கொள்வோம்.



எமதர்மனின் மகன் அனலாசுரன் தன்னுடைய பெயர் போலவே எப்போதும் (அனலால்) கொதித்து கொண்டே இருப்பான். இவனுடைய வேலையே யாருடைய உடம்பில் புகுந்து விடுகிறானோ அவர்கள் அறியா வண்ணம் அவர்களின் சக்தியை உறிஞ்சி விடுவது போன்றொரு வரம் ஒன்றை பெற்றிருந்தான். இவ்வரத்தை பெற்ற பின் தன்னை எதிர்க்க எவரும் இல்லை என்ற செருக்குடன் பூலோகத்தில் இருந்தவர்களுக்கு இடையறாது துன்பங்களை விளைவித்தான். இறுதியில் தேவர்களையும் துன்புறுத்துவதற்காக தேவலோகம் சென்றான். இச் செய்தியை அறிந்த தேவர்கள் செய்வதறியாது திகைத்து பின்னர் விநாயகப் பெருமானிடம் தங்களை காக்க வேண்டி சரணாகதி அடைய, விநாயகரும் தேவர்களின் நிலை கண்டு அவர்களை காக்க தன் படைகளுடன் அனலாசுரனை எதிர்த்து போரிட தொடங்கினார். ஆனால் அனலாசுரன் விநாயகரின் படைகளை தான் பெற்ற வரத்தின் மூலம் தன் வாயில் இருந்து வந்த அனலைக் கக்கி அழித்து விட்டான்.

இதனால் கடும் கோபம் கொண்ட விநாயகப் பெருமான் இறுதியில் அனலாசுரனை தன் துதிக்கையினால் சுருட்டி விழுங்கி விட்டார். விநாயகரின் வயிற்றுக்குள் சென்ற அனலாசுரன் தனது வெப்பத்தால் விநாயகரின் உடலை சூடாக்கினான். அதனால்



உண்டான எரிச்சல் தாங்க முடியாத பெருமானும் தன் "வயிறு எரிகிறதே" என்று கூறினார். விநாயருக்கு ஏற்பட்ட வெப்பத்தால் ஒட்டு மொத்த உலகமும் வெந்தது.

இதனைக் கண்ட தேவர்கள் பலரும் கங்கை நீர் கொண்டு அபிஷேகம் செய்து சூட்டை தணிக்க முயற்சி செய்தனர். ஆனால் வெப்பமும், எரிச்சலும் குறையவில்லை. அப்போது சப்த ரிஷிகளான அத்ரி, பிருகு, குதஸர், வசிஷ்டர், கவுதமர், காஸ்யபர், ஆங்கிரஸரும் அங்கு வந்தனர். அவர்கள் ஒரு சாண் அளவிருக்கும் 21 அருகம்புற்களை விநாயகர் மீது சாத்த உடன் வெப்பம் முழுக்க தணிந்து விநாயகரின் திருமேனியும் குளிர்ந்து விட்டது. விநாயகரின் மேனி குளிர்ந்தவுடன் உலகமும் வெப்பம் தணிந்து தன்னிலை அடைந்தது.

அனலாசுரனும் விநாயகரின் வயிற்றில் ஜீரணம் ஆகி விட, இதனை கண்டு மகிழ்ந்த பெருமான் இனி எனது அருள் வேண்டுபவர்கள் எனக்கு அருகம்புல் அர்ச்சனை செய்திடல் வேண்டும் என்று கூறினார். அன்று முதல் விநாயகப் பெருமானுக்கு அருகம்புல் அர்ச்சனை செய்யும் வழக்கம் ஏற்பட்டது. வெப்பத்தை தணிக்கும் பெரும் ஆற்றல் கொண்ட அருகம்புல் விநாயகர் வழிபாட்டில் முதலிடம் பெற்றது. ஆனைமுகனின் அருளை பெற எளிய வழி அருகம்புல் சாற்றுவதே ஆகும்.

மேலும் நமது முன்னோர்கள் நமக்கு வெப்பத்தை குறைக்க காட்டிய வழிகளில் இதுவும் ஒன்று. சாதாரண புல் போன்று காட்சி தரும் அருகம்புல் அளப்பரிய மருத்துவ குணங்களை தன்னிடத்தே கொண்டது. உடலில் சூடு அதிகமாகும் போது ஏற்படும் பக்க விளைவுகளான கண் எரிச்சல், வயிறு சம்பந்தமான நோய்களுக்கு சிறந்த நிவாரணியாக இருந்து உடல் சூட்டை குறைத்து ஆரோக்கியத்தையும் அளிக்கும். இது எல்லா காலங்களிலும் வளரும். கோடை காலத்தில் கூட காயுமே தவிர அழியாது. சிறு மழை பெய்தாலும் பசுமையாக துளிர் விட்டு வளரும் தன்மையுடையது அருகம்புல். இத்தகைய சிறப்பான ஆற்றல் உடைய அருகம்புல்லை விநாயகருக்கு சாற்றி நாமும் அவர் அருளாசியை பெறுவோம்.

....... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# KRISHNA DELISH COFFEE

KRISHNA DELISH COFFEE
GREAT TASTE




## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்



இனிய விநாயகர் சதுர்த்தி நல்வாழ்த்துக்கள்

## 1 கிலோ காபி பவுடர்

## ரூ 920 மட்டுமே

* Condition Apply

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 25 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181

Mylapore
Ganapathy's®
Since 1942

Mylapore Ganapathy's
CELEBRATING
84 Years
ANNIVERSARY
Since 1942

**BUTTER & GHEE**

# Vinayagar Chaturthi Wishes



**September | 14 | 2026**

**— Monday —**

## Visit our stores to place Sweet Kozhukattai order

**( Last Date : 12th September, Saturday )**

**MYLAPORE BRANCH**
# 14, Chitrakulam West Street,
(Near P.K.Mahal Kalyana Mandapam)
Mylapore, Chennai - 600 004
Tel : 044-2464 0292, 89390 27272

**WEST MAMBALAM BRANCH**
# 50, Arya Gowda Road,
(Near Shobanaa Kalyana Mandapam)
West Mambalam, Chennai - 600 033
Tel : 044-4856 6363, 89390 36363

Queries / Feedback : 044 - 4856 6781, WhatsApp : 73581 56781 / Email : info@mylaporeganapathys.com

**SHOP ONLINE** www.mylaporeganapathys.com